சரியாக, நல்லமுறையில் இயங்காததால் அதை நல்ல முறையில் இயங்க வைப்பதற்காகப் பல முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் தகுந்த பலன் தராததால் அது மூடப்பட வேண்டுமென்ற நிலையில் அதற்கான நடவடிக்கைகள் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தில் எந்த அளவு நிலைமைகள் இருக்கின்றனவோ அதற்கு ஏற்ப கையாளப்பட்டிருக்கின்றன. இதனால் விவசாயிகளுக்கு உடனடியாக தரப்பட வேண்டிய பணம் தரப்படாமல் சொத்துக்களை விற்று வழங்க வேண்டுமென்ற நிலை உருவானது. அதை விற்கக் காலதாமதம் ஆனதால்தான் ரூ. 45,931.30 கொடுக்கப்படாமல் இருந்தது. நேற்றைக்கு இதுகுறித்து என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பிறகு இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அதைத் திருப்பிக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே இன்னும் ஒரு மாதத்திற்குள் இந்தப் பணம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையைக் குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

"1960–61 மற்றும் 1962–63 முதல் 1969–70 வரையிலான ஆண்டுகளுக்குரிய தமிழ்நாடு அரசுக் கணக்குகள் குறித்த பொது நிறுவனங்கள் தொடர்பான பத்திகள் பற்றிய குழுவின் (1982–83) இருபத்தி மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை"

6. அரசினர் தீர்மானங்கள்.

(அ) பாரதியார் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 நவம்பர் 18

'' கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

1. திரு. மா. சின்னராசு
2. திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) பாரதிதாசன் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:—

1. திரு. க. பாலசுப்பிரமணியன்
2. திரு. கி. கிருஷ்ணமூர்த்தி ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

(இ) காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

'' காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு (Senate) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

திரு. வ. பாலகிருஷ்ணன் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.